மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.06/2024
அ.வ.எண்.196/2024

1. பாலன்
2. பெருமாள்
3. முனுசாமி
4. கோவிந்தராஜ்
5. சேகர் ... மனுதாரர்கள்/வாதிகள்

For themselves and on behalf of the public of
Anna Nagar, Kaveri Cross, Navapatti Village,
Mettur Taluk, Salem District.

/எதிராக/

1. மாதேஸ்
2. பெருமாள் ... எதிர்மனுதாரர்கள்/1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 03.02.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.P.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.கணபதி சுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 39 விதிகள் 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151-ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) மனுதாரர்கள்/வாதிகள் அ.வ.எண்.20/2021 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்ய கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியும் 1, 2

எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள் தங்களுக்காகவும், நவப்பட்டி கிராமம், காவேரி கிராஸ், அண்ணாநகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் சார்பாகவும், இவ்வழக்கை பிரதிநிதித்துவ அடிப்படையில் தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்துக்கள் நத்தம் நிலங்களாகும். தாவா 2வது அயிட்ட சொத்து தென்வடலாக செல்லும் வண்டித்தடமாகும்.

(ii) கிழமேலாக செல்லும் பவானி – மேட்டுர் பிரதான சாலையிலிருந்து தாவா B அயிட்ட தடவழி தெற்காக பிரிந்து செல்கிறது. மேற்படி தடவழியை பயன்படுத்தி தான் ஊர்மக்கள் அனைவரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், மாரியம்மன் கோவில், பஞ்சாயத்து குடிநீர் தொட்டி மற்றும் பஞ்சாயத்து கிணறு ஆகியவற்றிற்கு செல்ல இயலும். நவப்பட்டி பஞ்சாயத்தால் கடந்த 2001ம் வருடத்தில் மேற்படி சாலை அமைக்க தீர்மானம் போடப்பட்டுள்ளது. நத்தம் சர்வே எண்.330/4ல் 0.0059.0 சதுரமீட்டர் (1–1/2 சென்ட்) அளவிற்கு மட்டுமே 1, 2 பிரதிவாதிகள் பெயரில் அரசாங்கத்தால் பட்டா எண்.757 வழங்கப்பட்டுள்ளது.

(iii) அவ்வாறு உள்ள நிலையில், 1ம் பிரதிவாதி தனக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட HSD பட்டாவின்படி பழைய ச.எண்.114/1ல் தற்போது இவ்வழக்கிலுள்ள B அயிட்ட சொத்தையும் சேர்த்து மொத்தம் 2 சென்ட் நிலம் தனக்கு பாத்தியப்பட்டது என தவறாக கூறியும், தேவையான தரப்பினர்களை சேர்க்காமலும், உண்மை சங்கதிகளை மறைத்தும், ஊர் பொதுமக்கள் பயன்படுத்தும் வண்டித்தடத்தை அபகரிக்க வேண்டியும், அ.வ.எண்.20/2021 என்ற வழக்கை தாக்கல் செய்து தனக்கு ஆதரவாக தீர்ப்பாணை பெற்றுள்ளார்.

(iv) மேற்படி தீர்ப்பாணைக்கு பின்னிட்டு கடந்த 17.09.2024ம் தேதியில் மேற்படி அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி, மேற்படி B அயிட்ட சொத்து தனக்கு தான் பாத்தியப்பட்டது என கூறி, விளம்பர பலகை வைத்ததோடு, மேற்படி நிலத்தில் தனது வாகனங்களை நிறுத்தி, B அயிட்ட தடவழியை ஊர் பொதுமக்கள்

பயன்படுத்துவதை தடுத்து பிரச்சனை செய்து வருவதால், மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 2ம் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதிலுரையின் சுருக்கம்:–

(குறிப்பாணையின் பேரில் பதிலுரை இம்மனுவின் 1, 2 எதிர்மனுதாரர்களால் தங்களது எதிருரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் செல்லதக்கதல்ல. மனுதாரர்கள் தங்களுக்காகவும், ஊர் பொதுமக்களுக்காகவும் பிரதிநிதித்துவ அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்ய உரிமையற்றவர்கள். ஏற்கனவே அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி, மேற்படி B அயிட்ட சொத்தையும் சேர்த்து மொத்தம் 2 சென்ட் நிலம் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என இந்நீதிமன்றத்தால் விளம்புகை செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் இடையே உள்ள முன்விரோதம் காரணமாக, மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

(ii) தாவா B அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ள 1/2 சென்ட் நிலத்தையும் சேர்த்து 1ம் எதிர்மனுதாரருக்கு அரசாங்கத்தால் 1985ம் வருடமே HSD பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையிலும், அதன் அடிப்படையில் அரசாங்கத்தில் கடன் ஒதுக்கீடு பெற்று, மேற்படி நிலத்தில் 1ம் எதிர்மனுதாரர் 1–1/2 சென்ட் நிலத்தில் வீடு கட்டியும், 1/2 சென்ட் நிலத்தை காலியாக விட்டும், வசித்து வரும் நிலையில், 2001ம் வருடத்தில் மேற்படி B அயிட்ட சொத்து வண்டித்தடமாக ஊர்மக்கள் பயன்படுத்த தீர்மானம் போடப்பட்டது என கூறுவது தவறானதாகும்.

(iii) மேலும் மேற்படி அ.வ.எண்.20/2021 என்ற வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டதற்கு பின்பு மேற்படி தீர்ப்பு படி, 1/2 சென்ட் நிலத்தை அளந்து, தன்னிடம் ஒப்படைக்க வேண்டும்

என 1ம் எதிர்மனுதாரர் கடந்த 28.10.2024ம் தேதியில் வருவாய் துறையில் விண்ணப்பித்ததன் பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. B அயிட்ட சொத்தானது வண்டித்தடம் என்பதும் முற்றிலும் தவறானதாகும். மேலும் பொது சுகாதார நிலையம், தண்ணீர் தொட்டி, மாரியம்மன் கோவில் ஆகியவற்றிற்கு செல்வதற்கு ச.எண்கள்.331, 329 ஆகியவற்றில் வேறு தடவழிகளும் உள்ளது. மனுதாரர்கள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என 1, 2 எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள்/வாதிகள் அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்ய கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியும் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுதாரர்கள் தங்களுக்காகவும், நவப்பட்டி கிராமம், காவேரி கிராஸ், அண்ணாநகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் சார்பாகவும், இவ்வழக்கை பிரதிநிதித்துவ அடிப்படையில் தாக்கல் செய்துள்ளனர் என்றும், தாவா சொத்துக்கள் நத்தம் நிலங்கள் என்றும், தாவா 2வது அயிட்ட சொத்து தென்வடலாக செல்லும் வண்டித்தடம் என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(ii) மேலும் கிழமேலாக செல்லும் பவானி – மேட்டூர் பிரதான சாலையிலிருந்து தாவா B அயிட்ட தடவழி தெற்காக பிரிந்து செல்கிறது என்றும், மேற்படி தடவழியை பயன்படுத்தி தான் ஊர்மக்கள் அனைவரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், மாரியம்மன் கோவில், பஞ்சாயத்து குடிநீர் தொட்டி மற்றும் பஞ்சாயத்து கிணறு ஆகியவற்றிற்கு செல்ல இயலும். நவப்பட்டி பஞ்சாயத்தால் கடந்த 2001ம் வருடத்தில் மேற்படி சாலை அமைக்க தீர்மானம் போடப்பட்டுள்ளது என்றும், நத்தம் சர்வே எண்.330/4ல் 0.0059.0 சதுரமீட்டர் (1–1/2 சென்ட்) அளவிற்கு மட்டுமே 1, 2 பிரதிவாதிகள் பெயரில் அரசாங்கத்தால் பட்டா எண்.757 வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) அவ்வாறு உள்ள நிலையில், 1ம் பிரதிவாதி தனக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட HSD பட்டாவின்படி பழைய ச.எண்.114/1ல் தற்போது இவ்வழக்கிலுள்ள B அயிட்ட சொத்தையும் சேர்த்து மொத்தம் 2 சென்ட் நிலம் தனக்கு பாத்தியப்பட்டது என கூறியும், தேவையான தரப்பினர்களை சேர்க்காமலும், உண்மை சங்கதிகளை மறைத்தும், ஊர் பொதுமக்கள் பயன்படுத்தும் வண்டித்தடத்தை அபகரிக்க வேண்டியும், அ.வ.எண்.20/2021 என்ற வழக்கை தாக்கல் செய்து தனக்கு ஆதரவாக தீர்ப்பாணை பெற்றுள்ளார் என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iv) மேலும் மேற்படி தீர்ப்பாணைக்கு பின்னிட்டு கடந்த 17.09.2024ம் தேதியில் மேற்படி அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி, மேற்படி B அயிட்ட சொத்து தனக்கு தான் பாத்தியப்பட்டது என கூறி, விளம்பர பலகை வைத்ததோடு, மேற்படி B அயிட்ட தடவழியை ஊர் பொதுமக்கள் பயன்படுத்துவதை தடுத்து பிரச்சனை செய்து வருவதால், மனுதாரர்கள், 1, 2 எதிர்மனுதாரர்கள் மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராகஇம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(v) 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் தங்களுக்காகவும், ஊர் பொதுமக்களுக்காகவும் பிரதிநிதித்துவ அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்ய உரிமையற்றவர்கள் என்றும், ஏற்கனவே அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட

தீர்ப்பின்படி, மேற்படி B அயிட்ட சொத்தையும் சேர்த்து மொத்தம் 2 சென்ட் நிலம் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என இந்நீதிமன்றத்தால் விளம்புகை செய்யப்ட்டுள்ள நிலையில், மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் இடையே உள்ள முன்விரோதம் காரணமாக, மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(vi) மேலும் தாவா B அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ள 1/2 சென்ட் நிலத்தையும் சேர்த்து 1ம் எதிர்மனுதாரருக்கு அரசாங்கத்தால் 1985ம் வருடமே HSD பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையிலும், அதன் அடிப்படையில் அரசாங்கத்தில் கடன் ஒதுக்கீடு பெற்று, மேற்படி நிலத்தில் 1ம் எதிர்மனுதாரர் 1–1/2 சென்ட் நிலத்தில் வீடு கட்டியும், 1/2 சென்ட் நிலத்தை காலியாக விட்டும், வசித்து வரும் நிலையில், 2001ம் வருடத்தில் மேற்படி B அயிட்ட சொத்து வண்டித்தடமாக ஊர்மக்கள் பயன்படுத்த தீர்மானம் போடப்பட்டது என கூறுவது தவறானது என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(vii) மேலும் மேற்படி அ.வ.எண்.20/2021 என்ற வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டதற்கு பின்பு மேற்படி தீர்ப்பு படி, 1/2 சென்ட் நிலத்தை அளந்து, தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என 1ம் எதிர்மனுதாரர் கடந்த 28.10.2024ம் தேதியில் வருவாய் துறையில் விண்ணப்பித்ததன் பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், B அயிட்ட சொத்தானது வண்டித்தடம் என்பதும் முற்றிலும் தவறானது என்றும், மேலும் பொது சுகாதார நிலையம், தண்ணீர் தொட்டி, மாரியம்மன் கோவில் ஆகியவற்றிற்கு செல்வதற்கு ச.எண்கள்.331, 329 ஆகியவற்றில் வேறு தடவழிகளும் உள்ளது என்றும், மனுதாரர்கள் துாய கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(viii) இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாதுரைகள், வழக்கு ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததன் பேரிலும், கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்களின் மதிப்புமிக்க வாதங்கள் கருத்தில் கொள்கையிலும், மனுதாரர்கள்/வாதிகள் அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்ய கோரியும், நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது. தாவா B அயிட்ட சொத்தானது ஊர் மக்கள் பயன்படுத்தும் பொதுத்தடவழி என்றும், மேற்படி B அயிட்ட சொத்தில் 1, 2 எதிர்மனுதாரர்கள் விளம்பர பலகை வைத்தும், வாகனங்களை நிறுத்தியும், மனுதாரர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் மேற்படி தாவா B அயிட்ட சொத்திற்கு செல்லும் பொது தடவழியை தடுப்பதாகவும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(ix) இம்மனுவின் விவாதத்திற்குள் செல்லும் முன் தாவா B அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள 1/2 சென்ட் நிலம் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என அ.வ.எண்.20/2021 என்ற வழக்கில் விளம்புகை செய்யப்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. அதேபோல் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் நபர் வழக்கில் தனக்குள்ள முதல்தோற்ற வழக்கு (Prima facie case), வசதியின் சமநிலை (Balance of convenience), ஈடு செய்ய இயலா இழப்பு (Irreparable Loss) ஆகியவற்றை நிரூபிக்க வேண்டும் என்பது நன்கு நிறுவப்பட்ட சட்டநிலைப்பாடாகும்.

(x) இந்நிலையில் ச.எண்.330/17 ல் உள்ள தாவா B அயிட்ட சொத்தான 1/2 சென்ட் நிலம் பொதுப்பாதை என வருவாய் ஆவணங்களில் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறி, மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.9 குறுந்தகடுகளுடன் கூடிய புகைப்படங்கள், ம.சா.ஆ.4 நவப்பட்டி ஊராட்சி தலைவரால் வழங்கப்பட்டுள்ள பஞ்சாயத்து தீர்மானத்திற்குரிய நகல், ம.சா.ஆ.6 'அ' பதிவேடு, ம.சா.ஆ.7 அடங்கல் பதிவேடு, ம.சா.ஆ.8 புலவரைபடம் ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

(xi) மேற்படி சான்றாவணங்களில் ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள குறுந்தகடுகளுடன் கூடிய புகைப்படங்களுக்கு மனுதாரர்கள் தரப்பில் பாரதிய சாக்ஷிய அதிநியம் 2023 ன் பிரிவு 63(4)ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சான்றிதழ் எதையும் மனுதாரர்கள் இணைத்து தாக்கல் செய்யாததால், மேற்படி இரு ஆவணங்களும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு உகந்தவையல்ல என

இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி ஆவணங்களை தவிர்த்துவிட்டு, இதர ஆவணங்களை பரிசீலனை செய்கையில், ம.சா.ஆ.6 'அ' பதிவேட்டில் ச.எண்.330/17 தெரு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(xii) மேற்படி ம.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், ச.எண்.330/17 ஆனது தெரு என அரசாங்கத்தால் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொள்கையில், ம.சா.ஆ.6 ஆவணத்தின் அடிப்படையில், மேற்படி ச.எண்.330/17 ல் உள்ள நிலமானது தடவழி என்பதற்கான முதல்தோற்ற வழக்கு (Prima facie case) உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி ம.சா.ஆ.6 ஆவணம் சமீபத்திய ஆவணம் என எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வாதம் செய்துள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி ஆவணம் சமீபத்தில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஆவணம் என்பதாலேயே அதன் உண்மைத் தன்மையை வழக்கின் முதற்கட்ட நிலையில் சந்தேகிக்க இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xiii) அடுத்ததாக, மனுதாரர்கள் தற்போது தாங்கள் கோரும் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் தங்களுக்கு வழங்காவிட்டால் தங்களுக்கு எந்தவகையில் ஈடு செய்ய இயலா இழப்பு ஏற்படும் என காண்பித்துள்ளனரா? என்பதை பரிசீலனை செய்கையில், மனு பிரமாணப்பத்திரிக்கை பத்தி 10 ல், “I submit that we have made out prima-facie case and the balance of convenience lies in our favour for the grant of temporary injunction.” என வாதுரைத்துள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் மனுதாரர்கள் தங்கள் மனு பிரமாணப்பத்திரிக்கையிலேயே மனுதாரர்கள் கோரும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கப்படாவிட்டால், தங்களுக்கு எந்தவகையில் ஈடு செய்ய இயலா இழப்பு (Irreparable Loss) ஏற்படும் என்பது குறித்து குறிப்பாக வாதுரைக்கவில்லை என தெரியவருகிறது.

(xiv) இந்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றத்தால், "AIR 2012 SC 2448, Best Sellers Retail India (P) Ltd., vs. Aditya Nirla Nuvo Ltd.," என்ற வழக்கில், பத்தி 14 ல், "... the settled principle of law is that even where prima facie case is in favour of the plaintiff, the court will refuse

temporary injunction if the injury suffered by the plaintiff on account of refusal of temporary injunction was not irreparable..." என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அதேபோல் மாண்பமை உச்சநீதிமன்றத்தால், "1992 (1) SCC 719, Dalpat Kumar & Anr. v. Prahlad Singh & Ors." என்ற வழக்கில்,

> "Satisfaction that there is a prima facie case by itself is not sufficient to grant injunction. The court further has to satisfy that non-interference by the court would result in "irreparable injury" to the party seeking relief and that there is no other remedy available to the party except one to grant injunction and he needs protection from the consequences of apprehended injury or dispossession. Irreparable injury, however , does not mean that there must be no physical possibility of repairing the injury, but means only that the injury must be a material one, namely, one that cannot be adequately compensated by way of damages."

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(xv) மேற்கண்ட முன்தீர்ப்புகளில் வகுத்துரைக்கப்பட்டுள்ள சட்டநிலைப்பாடுகளை கருத்தில் கொள்கையில், மனுதாரர்கள் தற்போது இம்மனுவில் முதல்தோற்ற வழக்கை (Prima facie case) காண்பித்துள்ள போதிலும், இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால், தங்களுக்கு எவ்வாறு ஈடு செய்ய இயலா இழப்பு (Irreparable loss) ஏற்படும் என்பது குறித்து மனு பிரமாணப்பத்திரிக்கையில் குறிப்பாக எங்கும் வாதுரைக்கவில்லை என்பதையும் கருத்தில் கொள்கையிலும், மனுதாரர்கள் கோரிய இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xvi) அதேபோல் வசதியின் சமநிலை (Balance of convenience) குறித்து பரிசீலனை செய்கையில், இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்வது யாதெனில், மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள புலவரைபடத்தை பரிசீலனை செய்கையில், தற்போது மனுதாரர்கள் பொதுத்தடவழி என கூறும் ச.எண்.330/17 ல் உள்ள நிலத்தை ஒட்டி ச.எண்.331 லும் தடவழி செல்வது தெரியவருகிறது. மேலும் மேற்படி சங்கதி குறித்து 1, 2 எதிர்மனுதாரர்கள் தங்களது எதிருரையில், குறிப்பாக ச.எண்.331 ல் தடவழி செல்வதாகவும், அதன் வழியாக மேற்படி அரசு ஆரம்ப சுகாதார நிலையம், மாரியம்மன் கோவில், பஞ்சாயத்து குடிநீர் தொட்டி மற்றும் பஞ்சாயத்து கிணறு ஆகியவற்றிற்கு செல்ல இயலும் என சொல்லியுள்ள நிலையில், மனுதாரர்கள் தரப்பில் மேற்படி

சங்கதிகளை மறுத்து எவ்வித மறுப்புரையும் (Reply) தாக்கல் செய்யவில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(xvii) அவ்வாறு மனுதாரர்களுக்கு மேற்படி அரசு ஆரம்ப சுகாதார நிலையம், மாரியம்மன் கோவில், பஞ்சாயத்து குடிநீர் தொட்டி மற்றும் பஞ்சாயத்து கிணறு ஆகியவற்றிற்கு செல்வதற்கு ச.எண்.331ல் மாற்று வழித்தடம் உள்ள நிலையில், அ.வ.எண்.20/2021ல் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என இந்நீதிமன்றத்தால் விளம்புகை செய்யப்பட்டுள்ள தற்போது இவ்வழக்கில் B அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ள பிரச்சனைக்குரிய 1/2 செண்ட் நிலத்தை பொறுத்து இந்நீதிமன்றத்தால் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கப்படும் பட்சத்தில் மேற்படி அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை அனுசரித்து 1ம் எதிர்மனுதாரர் நிறைவேற்று மனு தாக்கல் செய்ய இயலாத சூழல் எழும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(xviii) மேலும் அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை பொறுத்து நாளது வரை மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்படாத நிலையில், நாளது தேதிவரை மேற்படி தீர்ப்பாணை செயல்பாட்டில் உள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. அதேபோல் மேற்படி அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் செல்லுதன்மை தற்போது இவ்வழக்கின் விசாரணையில்தான் தீர்மானிக்க இயலும் எனும் நிலையில், மனுதாரர்கள் கோரும் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கப்படும் பட்சத்தில், இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் நிறைவேற்றத்தை இந்நீதிமன்றமே தடை செய்தது போல் ஆகிவிடும்.

(xix) மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் மனுதாரர்கள் தாங்கள் கோரும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து மேற்படி பரிகாரத்தை வழங்காவிட்டால் மனுதாரர்களுக்கு ஏற்படும் பாதிப்பை விட, மேற்படி பரிகாரத்தை வழங்கினால் எதிர்மனுதாரர்களுக்கு அதிக பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளின் மேம்பட்ட நிலை உள்ளதால், வசதியின் சமநிலை (Balance of convenience) 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு சாதகமாகவே உள்ளதாக இந்நீதிமன்றம்

கருதுகிறது. எனவே மனுதாரர்கள் தாங்கள் கோரும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து முதல்தோற்ற வழக்கு (Prima facie case) உள்ளது என்பதை காண்பித்துள்ள போதிலும், மேற்படி பரிகாரத்தை பொறுத்து வசதியின் சமநிலை (Balance of convenience) மற்றும் ஈடு செய்ய இயலா இழப்பு (Irreparable Loss) ஆகிய சட்ட கூறுகளை நிரூபிக்காத நிலையில், மனுதாரர்கள் கோரிய இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2025.02.07 11:05:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:– இல்லை</u>
<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | தன்மை |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 05.09.2024 | அசல் வழக்கு எண்.20/2021 ன் தீர்ப்புரை | கணிணிநகல் |
| ம.சா.ஆ.2 | 18.09.2024 | புகார் மனு ரசீது | அசல் |
| ம.சா.ஆ.3 | 30.09.2024 | குறுந்தகடு (1) மற்றும் புகைப்படங்கள் (எண்ணிக்கை 4) மற்றும் ரசீது | அசல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.4 | 30.09.2024 | V.காளியம்மாள் தலைவர், நவப்பட்டி ஊராட்சி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தால், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேட்டுர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட கடிதம் | உண்மை நகல் |
| ம.சா.ஆ.5 | | மாதிரி வரைபடம் | அசல் |
| ம.சா.ஆ.6 | 04.05.2023 | "அ" பதிவேடு | உண்மை நகல் |
| ம.சா.ஆ.7 | | நத்தம் நிலவரித் திட்ட தூய அடங்கல் பதிவேடு | உண்மை நகல் |
| ம.சா.ஆ.8 | | புல வரைபடம் | உண்மை நகல் |
| ம.சா.ஆ.9 | | குறுந்தகடு, புகைப்படங்கள் (9), ரசீது | அசல் |
| ம.சா.ஆ.10 | 21.01.2025 | தினகரன் நாளிதழ் | அசல் |
| ம.சா.ஆ.11 | 10.02.2025 | ஸ்ரீ சக்தி விநாயகர், ஸ்ரீ சக்தி மாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக விழா அழைப்பிதழ் | அசல் |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:– இல்லை</u>
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | தன்மை |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 15.06.2016 | நவப்பட்டி கிராம சர்வே எண்.114/1 உத்தரவின் நமூனா | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 19.05.2015 | தகவல் கடிதம் | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 19.09.2001 | கொளத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலரின் நடவடிக்கைகள் | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 09.05.2017 | பிரதமமந்திரி குடியிருப்புத்திட்டம் (ஊரகம்) அனுமதி ஆணை | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.5 | 11.01.2021 | 1ம் எதிர்மனுதாரர் மாதேஸ் என்பவரால் மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் அவர்களுக்கு வழங்கிய விண்ணப்பம் | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.6 | 27.10.2010 | OS.253/2005 வழக்கின் தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.7 | 28.10.2024 | 1ம் எதிர்மனுதாரர் மாதேஸ் என்பவரால் வட்டாட்சியர், மேட்டூர் அவர்களுக்கு வழங்கிய விண்ணப்பம் மற்றும் E challan | நகல் |
| எ.ம.சா.ஆ.8 | 16.01.2025 | அறிவிப்பு கடிதம் | அசல் |
| எ.ம.சா.ஆ.9 | 20.01.2025 | 1ம் எதிர்மனுதாரர் மாதேஸ் என்பவரால் மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் அவர்களுக்கு வழங்கிய விண்ணப்பம் | நகல் |
| எ.ம.சா.ஆ.10 | 20.01.2025 | மேட்டூர் காவல் உதவி ஆய்வாளர் வழங்கிய அறிவிப்பு | அசல் |

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2025.02.07 11:05:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.